**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண்.188/2019**

2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 03–ஆம் நாள் புதன் கிழமை வா.சா.1. (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பாலமுருகன், மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : காசிநாதன் | சமயம் | : |
| த/பெ | : அருணாச்சலம் | வயது | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | மாவட்டம் | : |

---

<u>**வா.சா. 1–ன் முதல் விசாரணை**</u>

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். 23.06.1975 தேதியில் தாவா சொத்துக்களைப் பொருத்து என் தந்தை பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், 14.08.1985 தேதியில் தாவா சொத்துக்களை பொருத்து நானும் என் சகோதரரும் ஏற்படுத்திகொண்ட பரிவர்த்தனை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 10.11.2018 தேதியில் நானும் என் சகோதரரும் ஏற்படுத்திகொண்ட பாகப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், 17.02.1942 ல் எனது தாத்தா பிச்சைமுத்து பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய பத்திரம் அசல் **வா.சா.ஆ.4** ஆகவும், 10.09.1946 தேதியில் என் தந்தை மற்றும் எனது சித்தப்பா பெருமாள் பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய பத்திரம் அசல் **வா.சா.ஆ.5** ஆகவும், 21.12.1949 ல் என் தாத்தா பிச்சைமுத்து

பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய பத்திரம் அசல் **வா.சா.ஆ.6** ஆகவும், தாவா 1வது அயிட்ட சொத்தைப் பொறுத்து எனக்கு வட்டாட்சியர் வழங்கிய வீட்டு மனை ஒப்படைவு உத்தரவு **வா.சா.ஆ.7** ஆகவும், 02.04.2020 தேதியில் நான் பிரதிவாதி பெயரில் விக்கிரமங்களம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கான மனு ரசீது **வா.சா.ஆ.8** ஆகவும், 16.06.1955 தேதியில் என் தாத்தா பிச்சமுத்துவிற்கு கலியபெருமாள் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் அசல் **வா.சா.ஆ.9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கப்படுகிறது.

(ஒப்பம்) திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.